மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1992-93-அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை வைத்தல், மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் இப்பேரவையின் முன் வைக்கிறேன்.

முற்பகல் 10-55

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1992-93 ஆம் ஆண்டின் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
	A. வருவாய்க் கணக்கில் செலவு.	
1	நிலவரித்துறை	2,47,83
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	1,69,63
3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிருவாகம்	2,48,27
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம்	13,14,22
5	முத்திரைத் தாள்கள்— நிருவாகம்	80,14
6	பத்திரப் பதிவு	5,75,11

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை, (1)		(ரூபாய் ஆயிரத்தில்) (2)
	A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.	
7	மாநிலச் சட்ட மன்றம்	1,08,28
8	தேர்தல்கள்	83,50
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்	17,29,79
10	பால் வழங்கு திட்டங்கள்	1,72,11
11	மாவட்ட நிருவாகம்	55,02,77
12	தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் ..	2,98,46
13	நீதி நிருவாகம்	13,60,61
14	சிறைச்சாலைகள்	7,25,95
15	காவல் துறை	90,79,58
16	தீயணைப்புப் பணிகள்	7,43,55
17	கல்வி	5,05,92,62
18	மருத்துவம்	95,17,55
19	பொதுச் சுகாதாரம்	61,23,33
20	வேளாண்மை	2,07,00,82
21	மீனளம்	4,99,29
22	கால்நடை வளர்ப்பு	24,15,40
23	கூட்டுறவு	29,84,42
24	தொழில்கள்	5,31,77
*25	சின்கோனா	..

* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் எதுவும் கோரப்படவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

[1992 மார்ச் 24

கோரிக்கை (1)	(ரூபாய் ஆயிரத்தில்) (2)
A. வருவாய் கணக்கில் செலவு—தொடர்ச்சி	
26 கைத்தறியும் துணித் தொழிலும் ..	20,27,59
27 கதர்-கிராமத் தொழில்கள்	2,52,31
28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் ..	1,26,97,51
29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	16,87,42
30 சமூக நலன்	1,34,58,90
31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	38,00,85
32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்	12,31,20
33 வீட்டு வசதி	7,03,85
34 நகர்ப் பகுதி வளர்ச்சி	69,40,43
35 நுகர் பொருள் வழங்கல்	1,72,48,83
36 பாசனம்	45,04,98
37 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ..	2,27,99
38 பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்	16,83,81
39 சாலைகளும் பாலங்களும்	68,48,47
40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	3,67,90
41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	13,29,10
42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்	1,56,79,17
43 **பல்வகை**	60,41,38

1992 மார்ச் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
	A. வருவாய்க்கணக்கில் செலவு—தொடர்ச்சி	
44	எழுதுபொருள்-அச்சுத் துறை ..	9,78,50
45	காட்டுவளத் துறை	12,11,91
46	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	16,18,46
47	செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்	2,03,95
48	ஊரகத் தொழில்கள்	13,05,85
49	குடிநீர் வழங்கல்	57,02,22
50	நகராட்சி நிருவாகம்	23,03,06
51	சுற்றுலா	32,74
52	தமிழ் வளர்ச்சி-பண்பாடு	1,85,90
	மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு	22,60,79,41
	B, வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—	
53	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..	3,36,38
54	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	6,22,88
55	பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	33,23,97
56	பொதுப் பணிகள் - கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு	16,79,39
57	சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	17,91,04
58	சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	18,11
59	காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	12,92,23
60	ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	13,15
61	பல்வகை மூலதனச் செலவு	8,33,21
	மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	99,10,36

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

C, கடன்கள்—முன்பணங்கள் வழங்குதலும். கடனைத் திருப்பிக் கொடுத்தலும்,—

62 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	1,27,10,42
பெரு மொத்தம் ..	24,87,00,19

6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-92 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்குரிய இறுதித்துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 23,00,60 கோடி வருவாய்க் கணக்கிலும். ரூ. 13,08,26 கோடி மூலதனக் கடன் கணக்கிலும் வருகின்றது.

2. இப்பொழுது வைக்கப்பட்டுள்ள இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில், கோரப்பட்டுள்ள மொத்தத் தொகையில் ரூ, 11,67,70 கோடி நடப்பாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப் பற்றுகளைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது, இந்தத் தொகை அனுமதிக்கப்படுவதால், தேவைக்கேற்ப, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன்பணம் மற்றும் மிகைப் பற்றுக்கள் பெற மாநில அரசுக்கு ஏதுவாக இருக்கும், தமிழ்நாடு மின்வாரியம் செலுத்த வேண்டிய கடன்களையும். வட்டி நிலுவைகளையும். அதற்கு அளிக்கப்படும் உதவித் தொகையாக மாற்றும் பொருட்டு. ரூ. 17,69,10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணக்குகளில் சரியான நிலைமையைக் காட்டுவதற்கே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது, இந்த நிதி ஒதுக்கீடு நீங்கலாக, தேவைப்படும் எஞ்சிய நிதி ஒதுக்கீடு ரூ, 18,39.16 கோடி ஆகும்.